# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**FAST TRACK COURT AT MAGISTERIAL LEVEL,PATTUKKOTTAI**

| | |
|---|---|
| **STC. No.** | **149/2023** |
| **PW1 –பெயர்** | **J.ரஹமத்துல்லா** |
| தந்தை பெயர் | **ஜமால் முகமது** |
| **வயது** | **35/2025** |
| முகவரி | **2/776, புதுமனைத்தெரு, மல்லிப்பட்டினம்** |
| தாலுக்கா | **பட்டுக்கோட்டை** |
| வேலை | **டிராவல்ஸ் Owner** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of **12th day of August 2025**

**<u>ஆரம்பிக்கப்பட்ட நேரம் 03:20</u> PM**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி (PW1 cross was allowed vide Crlmp 1275/2025 )</u>**

**எதிரி ஆஜர்**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலரான திரு. S. குமார், (பலகை எழுத்தர் நிலை-3) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

1. நான் எதிரியின் வங்கி கணக்கிற்கு ஏதேனும் பணப்பரிவர்த்தனை செய்திருக்கிறேனா என்றால், இல்லை. எதிரியின் வங்கி கணக்கிற்கு, நான் 04.09.2020 அன்று பரிவர்த்தனை மேற்கொண்டிருக்கிறேனா என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. எனக்கு எதிரியுடன் 2020 ல் இருந்து பழக்கம் என்று சொன்னால், சரிதான். நான் 2020 ஆம் ஆண்டு எதிரியான அஸ்ரப் அலி-க்கு ரூ. 1,00,000/- (ஒரு இலட்சம்) ரூபாய் என்னுடைய IOB வங்கியிலிருந்து எதிரியின் SBI வங்கிற்கு அனுப்பினேனா என்று சொன்னால், எனக்கு ஞாபகம் இல்லை. மீரா முகைதீன் என்ற நபரை எனக்கு தெரியுமா என்றால், எனக்கு ஞாபகம்

இல்லை. 27.08.2020 அன்று மீரா முகைதீன் என்ற நபரின் வங்கி கணக்கிலிருந்து எதிரிக்கு நான் ரூ. 1,00,000/- (ஒரு இலட்சம்) பணம் அனுப்பினேனா என்று சொன்னால், எனக்கு ஞாபகம் இல்லை. 01.09.2020 அன்று ஜவாகீர் என்பவரின் வங்கி கணக்கில் இருந்து எதிரிக்கு ரூ.25,000/- (இருபத்தைந்தாயிரம்) அனுப்பினேனா என்று சொன்னால், எனக்கு தெரியவில்லை. மேற்கூறிய பரிவர்த்தனை தேதியான 04.09.2020, 27.08.2020, 01.09.2020 ஆகிய தேதிகளில், நான் எதிரிக்கு பணம் கொடுத்ததன் பெயரில் எதிரிக்கு என்மீது நம்பிக்கை ஏற்பட்டதன்பெயரில் எனக்கு அவர் பூர்த்தி செய்யப்படாத கையொப்பம் இட்ட இவ்வழக்கு காசோலை கொடுத்ததாகவும், அதை நான் தவறாக பயன்படுத்தி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. எதிரி எனக்கு மீதமுள்ள **ரூ.77,000/- ( எழுபத்து ஏழாயிரம்)** மட்டும்தான் கொடுக்கவேண்டும் என்றும், நான் பொய்யாக **ரூ. 3,80,000/-** (மூன்று இலட்சத்து எண்பதாயிரம்) என பூர்த்தி செய்து, காசோலையை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. எதிரியானவர், அதிராம்பட்டினத்தைச் சேர்ந்த **அப்துல்லாவின்** முன்னிலையில் வைத்து, புகார்தாரருக்கு சொந்தமான பட்டுக்கோட்டையில் உள்ள அரபா டிராவல்ஸ்-ல் வைத்து **ரூ.40,000/- ( நாற்பதாயிரம்)** எதிரி புகார்தாரரிடம் கொடுத்தார் என்று சொன்னால், சரியல்ல. மல்லிப்பட்டினத்தை சேர்ந்த **சேக்** என்பவரை வைத்தும், அதிராம்பட்டினத்தை சேர்ந்த **P.L. ஜவருல்லா** மற்றும் **ஜவாகீர்** ஆகியோரை வைத்தும், எதிரியானவர் எனக்கு **ரூ.50,000/- ( ஐம்பதாயிரம்)** கொடுத்தாரா என்று சொன்னால், கொடுக்கவில்லை. எதிரியும், **மகரூப்** என்ற நபரும் என்னுடைய அரபா டிராவல்ஸ்-ல் **ரூ.20,000/- ( இருபதாயிரம்)** கொடுத்தார்கள் என்று சொன்னால், சரியல்ல.

2. எதிரியானவர் புகார்தாரரிடம் ரூ.1,87,000/- (ஒரு இலட்சத்து எண்பத்து ஏழாயிரம்)-த்தை மேற்கண்ட நபர்களை வைத்து/முன்னிலையில் **ரூ.40,000/-,ரூ.50,000/-, ரூ.20,000/-** கொடுத்ததாகவும், இன்னும் மீதமுள்ள ரூ.77,000/- (எழுபத்து ஏழாயிரம்)-ம் தான் கொடுக்கவில்லை என்று சொன்னால்,சரியல்ல.

3. நான் எதிரியிடம் மேற்கொண்ட வங்கி பரிவர்த்தனையைப் பற்றி வங்கி மேலாளரிடம் விசாரணை செய்தால் உண்மைதன்மை தெரியும் என்று சொன்னால், எனக்கு ஞாபகம் இல்லை, அந்த பரிவர்த்தனையானது பல வருடங்களுக்கு முன் நடந்திருப்பதால், நான் எதற்காக பணம் அனுப்பினேன் என்று எனக்கு தெரியாது.

4. மேற்கண்ட நபர்களான **அப்துல்லா, சேக்**, **P.L. ஜவருல்லா, ஜவாகீர், மகரூப்** ஆகியோர்களை வைத்து எதிரியானவர் எனக்கு பணம் கொடுத்தார் என்றும், அவர்களை விசாரித்தால் உண்மை தன்மை தெரியும் என்று சொன்னால், நான் பணம் பெறவில்லை, அவர்களை விசாரிக்கலாம்.

5. எதிரியானவர் எனக்கு **ரூ. 3,80,000/-** (மூன்று இலட்சத்து எண்பதாயிரம்) கொடுக்கவேண்டிய கடமைப்பாடு இல்லை என்றும், ரூ.**1,87,000/-** (ஒரு இலட்சத்து எண்பத்து ஏழாயிரம்) ரூபாய்தான் கொடுக்கவேண்டும் என்றும், அதில் ரூ.**1,10,000/-** (ஒரு இலட்சத்து பத்தாயிரம்) என்னிடம் கொடுத்துவிட்டார் என்றும், மீதமுள்ள ரூ.77,000/- (எழுபத்து ஏழாயிரம்) ரூபாய்தான் எதிரியானவர் கொடுக்க கடமைப்பாடு கொண்டுள்ளார் என்று சொன்னால், சரியல்ல.

6. எதிரியானவர் நம்பிக்கையின் பெயரில் பூர்த்தி செய்யப்படாமல் கையொப்பம் மட்டும் இட்ட காசோலையை என்னிடத்தில் கொடுத்தார் என்றும், அதை நான் **ரூ. 3,80,000/-** (மூன்று இலட்சத்து எண்பதாயிரம்) என பூர்த்தி செய்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல.

7. எதிரியானவர் எனக்கு **ரூ. 3,80,000/-** (மூன்று இலட்சத்து எண்பதாயிரம்) கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால், சரியல்ல.

8. நான் எதிரிக்கு **ரூ. 3,80,000/-** (மூன்று இலட்சத்து எண்பதாயிரம்) ரூபாயை ரூ.2000/- நோட்டுகளா அல்லது ரூ.500/- நோட்டுகளாக தந்தேனா என்றால், ரூ.500/- நோட்டுகளா ஏழு (7) கட்டுகளும், ரூ.500/- ரூபாயாக அறுபது தாள்கள் (60)கொடுத்தேன். இந்த விபரத்தினை என்னுடைய அறிவிப்பிலோ, புகார் மனு, பிரமானவாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால், மொத்தமாக **ரூ. 3,80,000/-** (மூன்று இலட்சத்து எண்பதாயிரம்) என்று கூறியுள்ளேன், குறிப்பாக Denomination ஐ கூறவில்லை.

**<u>முடிக்கப்பட்ட நேரம் :</u> 04:12 PM**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.</u>**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/-திரு. மா. விசால் ஆனந்த்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், (நடுவர் நிலை)
பட்டுக்கோட்டை.